Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 264/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | பழனிச்சாமி |
| Father's Name | -- | சின்னமாசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 28th October 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கருமாபுரத்தில் குடியிருந்துவருகிறேன். நான் கட்டிட கூலி வேலை செய்துவருகிறேன். கடந்த சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் , எனது மாமா இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். கருமாபுரம் பஸ் நிறுத்தம் அருகே நானும் கருப்புசாமி, பட்டிஸ்வரன் , அம்மாவாசை ஆகியோர் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது பஸ் நிறுத்தம் அருகே பாலக்காடுரோட்டில் எனது மைத்துனர் நாகராஜ் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஸ்கூட்டில் வந்துகொண்டிருந்தார். அவருக்கு பின்னால் வெள்ள கார் ஒன்று வந்து கொண்டிருந்தது. அது வேகமாக வந்து அவரது ஸ்கூட்டின்மீது மோதி விபத்து ஏற்பட்டு, அதனால் எனது மைத்துனருக்கு தலையில் நல்ல அடிபட்டு இரத்தம் வந்தது. பின்பு ஆம்புலன்ஸ்க்கு தகவல் கூறினோம். ஆம்புலன்ஸ் வரவில்லை. அவர் வேலை செய்யும் கார்த்திக் கவுண்டர் கார் மூலமாக பிரபு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக கோவை அரசுமருத்துவமனையில் அனுமதித்தோம். அன்றிரவே அங்கு சிகிச்சை பலனின்றி அவர் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவுசெய்தனர். நடந்ததை கூறினேன். அவர்களை பதிவு செய்துகொண்டார்கள். நான் கையொப்பம் இட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும்புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அதசாஆ.1.** அந்த காரின் பதிவு எண் 2002 என்று முடியும். ஆஜர் எதிரிதான் அதனை ஓட்டிவந்த நபர் ஆவார். இது சம்பந்தமாக போலிசார் என்னை

விசாரித்தனர்.

குறுக்குவிசாரணைஇல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-க.செல்லையா,பிஏ.,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 264/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | பட்டிஸ்வரன் |
| Father's Name | -- | திருமார்த்தி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 28th October 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது ஜமீன் கோட்டாம்பட்டியில் குடியிருந்துவருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். கடந்த சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் , எனது உறவினர் ஒருவரின் இறப்பிற்கு கருமாபுரம் சென்றுகொண்டிருந்தபோது, அசா.1 பழனிச்சாமி, கருப்புசாமி மற்றும் தெரிந்த 2 நபர்கள் . கருமாபுரம் பஸ் நிறுத்தம் அருகே நின்றுகொண்டிருந்தபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நாகராஜ் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது அவருக்கு பின்னால் வேகமாக வந்துகொண்டிருந்த வெள்ளை கார் அவரை அடித்து தூக்கிவீசிவிட்டது., 108 க்கு தகவல் சொன்னோம். ஆம்புலன்ஸ் வர நேரமானதால் தோட்டத்துகாரின் காலில் பிரபு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக கோவை அரசுமருத்துவமனைக்கு எடுத்துசென்றார்கள். அன்றிரவு 1.30 மணியளில் மேற்படி நாகராஜ் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். காரின் பதிவு எண் 2002 என்றுமுடியும். அதனை ஓட்டிவந்தவரை பார்த்தால் என்னால்அடையாளம் காண இயலும். ஆஜர் எதிரிதான் அந்த ஓட்டுநர், போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை இல்லை

ஒம்/-க.செல்லையா,பிஏ.,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி

Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 264/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | கருப்புசாமி |
| Father's Name | -- | அம்மாசை |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 28th October 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது கருமாபுரத்தில் குடியிருந்துவருகிறேன். நான் கட்டிட கூலி வேலை செய்துவருகிறேன். கடந்த சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் , கருமாபுரத்தில் உறவினர் இறந்துவிட்ட இறப்பிற்காக நானும் அசா1.அசா.2 கருமாபுரம் பஸ் நிறுத்தம் அருகே நின்றுகொண்டிருந்தபோது, நாகராஜ் ஸ்கூட்டர்ல் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்துகொண்டிருந்தார். அவருக்கு பின்னால் வேகமாக வந்த கார் அவரது இருசக்கர வாகனத்தினை அடித்து தூக்கிவீசிவிட்டது. நாங்கள் சென்று பார்த்தோம். நாகராஜ் அடிபட்டு இரத்தம் வந்துகொண்டிருந்தது. 108 க்கு தகவல் சொல்லி வர காலதாமதம் ஆனதால் அவர் வேலை செய்யும் உரிமையாளரின் காரில் பிரபு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றார்கள். அன்றிரவே அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அந்த காரின் பதிவு எண் 2002 என்று முடியும். ஆஜர் எதிரிதான் அதனை ஓட்டிவந்தவர். போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை இல்லை

ஒம்/-க.செல்லையா,பிஏ.,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி